பயணம் செய்வோம் என்று பிடிவாதமாக சில பேர்கள் சொல்வதால்தான் இது போன்ற விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எம். கே. பாலன்.

திரு. எம்.கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் பேருந்துகள் நிற்கின்ற இடங்களில் அதிகமான பெண்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நெரிசல் நேரங்களில் அதிகமான ஆண்களும் பெண்களும் வருகிற காரணத்தாலும் கர்ப்பமாய் இருக்கிற பெண்கள் அவதிப்படுகின்ற காரணத்தாலும், இடம் கிடைக்காத காரணத்தால் ஆண்களும் பெண்களும் முட்டி மோதிக் கொண்டிருக்கிற காரணத்தாலும், பேருந்து நிலையங்களிலே மகளிர் நடத்துனர்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் : பெண்கள் பயணம் செய்வதற்கு உதவி செய்வதற்காகத்தான் இப்போது நெரிசலாக இருக்கும் இடங்களில், பேருந்துகள் நிற்கும் அதே இடத்தில் ஸ்டேன்டிங் கண்டக்டர்களாக பணியாற்றுவது கொஞ்சம் கடினமாக இருக்கிறது என்ற அடிப்படையிலேதான், முதலிலே 19 பேர்களை நடத்துனர்களாக பணியிலே அமர்த்தினாலும் கூட, அவர்களால் உள்ளே சென்று பயணச் சீட்டுகளை வழங்கி அங்கே பயணம் செய்பவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய முடியவில்லை. அதிலே கஷ்டங்கள் இருக்கின்றன என்று குறிப்பிட்ட காரணத்தாலேதான் அவர்கள் அனைவரும் பயணச் சீட்டுகளை மட்டும் நெரிசலாக இருக்கிற நேரங்களிலே அதிக பேருந்துகள் நிற்கும் இடத்திலேயே ஸ்டேன்டிங் கண்டக்டர்களாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [வினா எண் 146, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

146—

## சமயபுரம் செல்ல புதிய பேருந்து.

* 5306 திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாய்லர் தொழிற்சாலையிலிருந்து வேங்கூர் வழியாக சமயபுரம் செல்ல புதிய பேருந்து விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இயலாது.

திரு. த. ரத்தினவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் பாய்லர் தொழிற்சாலையின் பகுதியிலுள்ள மக்களின் நீண்டநாள் கோரிக்கை இது. குக்கிராமங்களுக்கெல்லாம் பஸ் போக்குவரத்தை விரிவுபடுத்தி வரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அந்தப் பகுதியிலுள்ள 15 ஆயிரம் தொழிலாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன் அடையும் வகையில் சிறப்பு திட்டத்தின் மூலமாகவாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே போக்குவரத்தை புதியதாக உருவாக்கித் தர ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அங்கீகரிக்கப்படாத பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே டெர்மினஸ்கள் உருவாக்கப்படவில்லை. ஆகவே அந்த பாய்லர் தொழிற்சாலை அருகில் பேருந்துகள் நிறுத்தப்படுகிற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 147, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

147—

புவனகிரி தொகுதியில் நெசவாளர் சங்கம்

* 1380 செல்வி கோ. மல்லிகா:

மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புவனகிரி தொகுதி நெசவாளர்கள் கைத்தறித் தொழிலையே நம்பியிருப்பதால் அவர்களின் பொருளதார நிலை சீரடைய நெசவாளர் சங்கம் அமைத்து விசைத்தறிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**(அ) மற்றும் (ஆ): விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்த கருத்துரு பெறப்பட்டால், துறை ஆவன செய்யும்.**